செ.வெ.எண்:35 நாள்:14.11.2017

# <u>செய்திகுறிப்பு</u>

**சேரன் மகாதேவி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு ஒற்றை சாளர முறையில் நலத்திட்ட உதவிகள் வழங்கிட சிறப்பு முகாம் மாவட்ட ஆட்சியர் திரு சந்தீப் நந்தூரி , இ.ஆ.ப அவர்கள் பார்வையிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள்**

திருநெல்வேலி மாவட்டத்தில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை பெற்றவர்களுக்கு ஒற்றை சாளர முறையில் நலத்திட்டங்கள் வழங்கிட ஏதுவாக சிறப்பு முகாம் 14.11.2017 அன்று ஊராட்சி ஒன்றிய அலுவலகம் சேரன்மகாதேவியில் நடைபெற்றது.

இம்முகாமினை திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் **திரு சந்தீப் நந்தூரி இ.ஆ.ப** அவர்கள் பார்வையிட்டு மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் மடக்கு சக்கர நாற்காலி பாதுகாவலருடன் அரசு பேருந்தில் சலுகை கட்டணத்துடன் பயணம் செய்ய 107 நபர்களுக்கு பேருந்து சலுகை அட்டை, வருவாய்த்துறை 15 நபர்களுக்கு மாதந்திர உதவித்தொகை வழங்கிட ஆணைகளும் வழங்கினார்கள். 14 நபர்களுக்கு விண்ணப்பம் பெறப்பட்டு ஆய்வு செய்து விரைவில் வழங்கப்படும்.

மேலும் இம்முகாமில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் **UDID** (நாடு முழுவதும் ஒரே மாதிரியான மாற்றுத்திறனாளிகளுக்கான அட்டை வழங்கிட **எஒண 176 நபர்களுக்கு** பதிவுகள், பராமரிப்பு உதவித்தொகை வழங்கிட 10 நபர்கள், வங்கி கடன் மான்யம் வழங்கிட 7 நபர்கள் விண்ணப்பங்கள் பெறப்பட்டன. மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மூலம் சுயதொழில் புரிய 7 நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்,மாவட்ட தொழில் மையம் மூலம் 15 நபர்குளக்கு UYEGP மூலம் வங்கி கடனுக்காக விண்ணப்பங்களும், 3 நபர்களுக்கு PMEGP மூலம் வங்கி கடனுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டன,

மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் 10 நபர்களுக்கு புதிய புதிவு, 10 நபர்களுக்கு வேலைவாய்ப்பற்றோர் நிவாரணத்தொகை, 2 நபர்களுக்கு தொழில்திறன் மேம்பாட்டு பயிற்சி ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மாண்புமிகு முதலமைச்சர் மருத்துவ காப்பீட்டு திட்டம் மூலம் 57 நபர்களுக்கு பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

இம்முகாமினை மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் நடத்தப்பட்டதால் வருவாய்த்துறை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மகளிர் திட்டம், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, **மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி**, **மாவட்ட தொழில் மையம்**, தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள், மற்றும் வேலைவாய்ப்பு அலுவலகம் ஆகிய துறைகள் பங்கேற்று தனித்தனியாக அறை அமைத்து (STALL) மாற்றுத்திறனாளிகளுக்காக திட்டங்களை எடுத்துரைத்து உரிய சலுகைகள் பெறும் தகுதியான நபர்களை தேர்ந்தெடுத்தனர்,

இம்முகாமில் சேரன்மகாதேவி சார் ஆட்சியர் திரு.ஆகாஷ்,இ.ஆ.ப., மாவட்ட ஆட்சியர் அவர்களின் நேர்முக உதவியாளர் (பஞ்சாயத்து வளர்ச்சி), எஸ்.முத்துஇளங்கோவன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திருமதி எப்.சாந்தி குளோரி எமரால்ட், சேரன்மகாதேவி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருமதி ஆ.மங்களம்(எ) கோமதி மற்றும் ஆ.லோக சங்கர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.**